09.09.2024

அ.வ.எண். 128/2018

வாசா.2 - மனோகரன்

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனது ஊர் சாமளாபுரம். எனது பூர்வீகம் ராசிபாளையம் அது சூலூரிலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. வாதி ராமசாமி எனக்கு தொழில் ரீதியாக பழக்கம். அவர் டெக்ஸ்டைல்ஸ் வியாபாரம் செய்கிறார். நான் நூல் வியாபாரம் செய்கிறேன். ராமசாமிக்கு சொத்தை விற்பனை செய்தவர்கள் குடும்பம் பற்றியோ அவர்களுக்கு எந்தெந்த காலையில் என்ன ஆவணங்களின்கீழ் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்றும் எனக்கு நேரடியாக தெரியாது. ராமசாமிக்கு எந்த ஆவணத்தின் கீழ் எவ்வளவு விஸ்தீரணம் அவர்கள் விற்பனை செய்தார்கள் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது. ராமசாமிக்கு விற்பனை செய்ததாக சொல்லியுள்ள ஆவணங்கள் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பத்திர அலுவலகத்திற்கு சென்றேன்.

மேற்படி பத்திர அலுவலகத்திற்கு ராமசாமியுடன் சென்றதாக என்னுடைய சங்கதிகளை என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை. அதேபோல் ராமசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் நான்குபுறத்திலும் யார்யார் உள்ளனர் அவர்களது காலை எண் என்ன, அவர்களது பெயர்கள் என்று எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ராமசாமி அவரது பூமியை சுற்றி கம்பி வேலி அமைத்துள்ளார் என்று அவரே அவரது வழக்கில் சொல்லாத சங்கதிகளை நான் புதியதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ராமசாமி அவரது விவசாய பூமியை சோளம், தென்னை பயிரிட்டுள்ளதை காட்ட அடங்கல் நான் தாக்கல் செய்யவில்லை. அதேபோல் அவரது பூமியை சுற்றி கம்பிவேலி அமைத்துள்ளதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு வழக்கு சொத்துப்பற்றியோ அதன் முன்பாத்தியஸ்தர்களைப் பற்றியோ 3 முதல்

6 பிரதிவாதிகள் பற்றியோ அவர்களது சொத்தைப்பற்றியோ எதுவும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

7 ,8 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகததால் வாதி சாட்சி 2 யை குறுக்கு விசாரணை செய்வதற்கான வாய்ப்பு முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.

Sd/மனோகரன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur